13833

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

ව්‍යාපාර අධ්‍යයනය I
**வணிகக் கல்வி I**
Business Studies I

**32 T I**

*පැය දෙකයි*
***இரண்டு மணித்தியாலம்***
*Two hours*

**அறிவுறுத்தல்கள்:**

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணைத்** தெளிவாக எழுதுக.
* **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.
* **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் : ..................................

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| **வினாத்தாள் I** | |
|---|---|
| **வினா இல.** | **புள்ளிகள்** |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| **மொத்தம்** | |

| | **கையொப்பம்** | **குறியீட்டு இல.** |
|---|---|---|
| 1 வது பரீட்சகர் | | |
| 2 வது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |

**1.** பின்வருவன மனிதத் தேவைகள் மற்றும் விருப்பங்கள் தொடர்பிலான சில குணாம்சங்கள் ஆகும்.

A - வரையறுக்கப்படாதவை
B - உருவாக்கக்கூடிய ஆற்றல் கொண்டவை
C - பலவகைப்பட்டவை
D - உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமானவை
E - வரையறுக்கப்பட்டவை
F - பொதுவானவை

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் மனித விருப்பங்களுக்கான குணாம்சங்களை மட்டும் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, D (2) A, B, C (3) A, C, E (4) B, D, E (5) B, D, F (......)

**2.** பின்வரும் அட்டவணையில் **X** நிரலானது ஊடகத்துறை தொடர்பிலான அக்கறையுடைய சில தரப்பினரையும் **Y** நிரலானது அவர்களது அக்கறைக்கான சில காரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| **X** | **Y** |
|---|---|
| A. நிருபர்கள் | 1. ஊடகத் தொழில்வாண்மையாளர்களுக்கான உரிமைகளை உறுதி செய்வதற்கு |
| B. பொது மக்கள் | 2. தகவல்களைச் சேகரிப்பதற்கு |
| C. அரசாங்கம் | 3. தகவல்களை முகாமை செய்வதற்கு |
| D. ஊடகத் தொழில்வாண்மையாளர்களின் தொழிற்சங்கங்கள் | 4. தகவல்கள் ஊடாக விழிப்படையச் செய்வதற்கு |
| E. ஊடக நிறுவகங்களின் நிர்வாகிகள் | 5. தகவல்கள் தொடர்பான கொள்கைகளை உருவாக்குவதற்கு |

அக்கறையுடைய தரப்பினரையும் அவர்களது அக்கறைக்கான காரணங்களையும் சரியாக இணைத்துக் காட்டும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 1, B - 2, C - 5, D - 3, E - 4
(2) A - 1, B - 3, C - 4, D - 5, E - 2
(3) A - 2, B - 4, C - 5, D - 1, E - 3
(4) A - 3, B - 1, C - 2, D - 4, E - 5
(5) A - 5, B - 2, C - 3, D - 4, E - 1 (......)

**3.** பின்வருவன வணிகம் ஒன்று தொடர்பான சூழல்சார் காரணிகளது சில போக்குகள் ஆகும்.

A - பொருளாதார விலை மட்டத்திலான அதிகரிப்பு
B - தொழில் தருனர் - தொழில் பெறுனர் முரண்பாடுகளில் அதிகரிப்பு
C - போட்டியில் அதிகரிப்பு
D - தொழில் பெறுனர் திரும்பலில் குறைவு
E - நிறுத்தி வைத்த உழைப்புக்களில் குறைவு
F - நுகர்வோர் சங்கங்களின் பலத்தில் அதிகரிப்பு
G - மூலப்பொருட்கள் வீணாகுவதில் குறைவு
H - வயது முதிர்ந்தோர் சனத்தொகையில் அதிகரிப்பு

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் அகச் சூழல் காரணிகளின் போக்குகளை மட்டும் கொண்டுள்ள தொகுதி யாது?

(1) A, B, C, D (2) A, D, E, G (3) B, C, E, H (4) B, D, E, G (5) C, F, G, H (......)

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

4. பின்வரும் அட்டவணையில் **X** நிரலானது வணிக நிறுவகங்களின் வித்தியாசமான வகைகளையும் **Y** நிரலானது அவை பதிவு செய்யப்பட வேண்டிய நிறுவகங்களின் பட்டியலையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. பங்குத்தரகுத் தொழில் கம்பனிகள் | 1. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் |
| B. காப்புறுதிக் கம்பனிகள் | 2. இலங்கை மத்திய வங்கி |
| C. உரிமம் பெற்ற வங்கிகள் | 3. இலங்கைப் பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு |
| D. கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் | 4. இலங்கைக் காப்புறுதிச் சபை |

வணிக நிறுவகங்களின் வகைகளையும் அவை பதிவு செய்யப்பட வேண்டிய நிறுவகங்களையும் சரியாக இணைத்துக் காட்டும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 1, B - 3, C - 2, D - 4
(2) A - 4, B - 1, C - 3, D - 2
(3) A - 1, B - 2, C - 4, D - 3
(4) A - 3, B - 4, C - 2, D - 1
(5) A - 3, B - 1, C - 2, D - 4 (......)

5. வாடிக்கையாளர் ஒருவர் குறித்த பண்டக்குறிப் பெயரைக் கொண்ட தகரத்திலடைத்த உணவுப்பொருளொன்றை வணிகரிடம் கேட்ட போது அவர் வித்தியாசமான பண்டக்குறிப் பெயரையுடைய தகரத்திலடைத்த உணவுப் பொருளொன்றை வழங்கினார். அந்த உற்பத்திப்பொருளில் உள்ளடங்கியுள்ள பொருட்கள் பற்றி அதன் சுட்டுத்துண்டின் மீது எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. வாடிக்கையாளர் அது பற்றி வணிகரிடம் விசாரித்த போதும் அவர் அதனைக் கருத்திற் கொள்ளவில்லை. மேலே தரப்பட்ட நிகழ்வின்படி மீறப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகளின் எண்ணிக்கை

(1) 2 ஆகும். (2) 3 ஆகும். (3) 4 ஆகும். (4) 5 ஆகும். (5) 6 ஆகும். (......)

6. வணிக நிறுவனங்களுடன் தொடர்புடையதான சில குணாம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - தொகுதிக் கடன்களை வழங்கக்கூடிய ஆற்றல்
B - வரையறுக்கப்படாத நட்டப் பொறுப்பு
C - சட்ட ஆளுமையின்மை
D - வணிகத்தை பதிவு செய்தல் கட்டயாமானது.
E - சுதந்திரமான தீர்மானம் எடுத்தல்
F - நிதிக்கூற்றுக்களைப் பிரசுரித்தல் கட்டாயமானது.

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் தனியுடைமை வணிகத்துக்குப் பொருத்தமான குணாம்சங்களைக் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, C, E (3) B, C, E (4) B, D, F (5) C, D, F (......)

7. பங்குடைமை வணிகங்கள் தொடர்பிலான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - பங்காளர்களுக்கிடையே எழுத்து வடிவிலான உடன்படிக்கை காணப்படுதல் அத்தியாவசியமானதாகும்.
B - வியாபாரப் பெயர் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் அத்தியாவசியமானதாகும்.
C - சட்ட ஆளுமை காணப்படுவதில்லை.
D - ஆகக்கூடிய பங்காளர் எண்ணிக்கையைப் பங்குடைமை உடன்படிக்கை தீர்மானிக்கின்றது.
E - பங்காளர்களின் நட்டப்பொறுப்பு வரையறுக்கப்படவில்லை.

மேலே தரப்பட்டவற்றுள் பங்குடைமை வணிகங்கள் தொடர்பிலான சரியான கூற்று/கூற்றுக்கள்

(1) C மட்டும்.
(2) C, E ஆகியன மட்டும்.
(3) C, D, E ஆகியன மட்டும்.
(4) A, B, C, E ஆகியன மட்டும்.
(5) A, B, C, D, E ஆகியன யாவும். (......)

8. வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றின் இயல்பு **அல்லாதது**

(1) பங்குதாரர் எண்ணிக்கையின் மீது உச்ச நிர்ணயமின்மை.
(2) பணிப்பாளர்களின் எண்ணிக்கை மீது உச்ச நிர்ணயமின்மை.
(3) பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடுதல் கட்டாயமானது.
(4) பங்கிலாபங்களைப் பிரேரிப்பதற்கு முன்பு கடன் கொடுத்துத் தீர்க்கும் ஆற்றல் பரிசோதனை தேவையானது.
(5) பங்குகளை பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய ஆற்றல். (......)

9. பின்ருவனவற்றுள் மிகச் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) முயற்சியாளர் ஒரு வணிகர் ஆவார்.
(2) முயற்சியாளர் ஒரு முகாமையாளர் ஆவார்.
(3) முயற்சியாளர் ஒரு தொழில்வாண்மையாளர் ஆவார்.
(4) முயற்சியாளர் ஒரு பகுப்பாய்வாளர் ஆவார்.
(5) முயற்சியாளர் ஒரு வாய்ப்பைத் தேடுபவர் ஆவார். (......)

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

**10.** பின்வருவனவற்றுள் வைப்புக்களை ஏற்க **முடியாத** நிதி நிறுவக வகை
(1) நம்பிக்கை அலகுகள்.
(2) உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்.
(3) உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள்.
(4) பிராந்திய அபிவிருத்தி வங்கிகள்.
(5) உரிமம் பெற்ற வணிக வங்கிகள். (......)

**11.** பின்வருவனவற்றுள் இலங்கை மத்திய வங்கியின் நேரடி மேற்பார்வையின் கீழ் வரும் நிறுவக வகைகளின் எண்ணிக்கை யாது?
A - உரிமம் பெற்ற வணிக வங்கிகள்
B - உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள்
C - உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்
D - கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்
E - சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்கள்
(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5 (......)

**12.** பின்வருவன இலத்திரனியல் கடனட்டை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள சில தகவல்கள் ஆகும்.
A - கடனட்டைச் சங்கத்தின் இலச்சினை
B - அட்டை இலக்கம்
C - காந்தத் தன்மை கொண்ட பட்டி
D - அட்டை உரிமையாளரின் பெயர்
E - அவசர தொலைபேசி இலக்கம்
F - காலாவதியாகும் திகதி
G - கையெழுத்துப் பட்டி
மேலே தரப்பட்டுள்ளவற்றுள் இலத்திரனியல் கடனட்டையின் முகப்பில் காணப்படும் தகவல்களை மட்டும் கொண்டுள்ள தொகுதி யாது?
(1) A, B, E, F (2) A, B, D, F (3) B, C, E, G (4) C, E, F, G (5) D, E, F, G (......)

**13.** மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய சில இடர்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - தேய்வு
B - விபத்துக்கள்
C - களவு
D - சந்தைப் பெறுமதியில் வீழ்ச்சி
E - விற்பனையின் மூலமாக உருவாகும் நட்டம்
F - மூன்றாந் தரப்பினருக்கான இழப்பு
மேலே தரப்பட்டுள்ளவற்றுள் மோட்டார் வாகனக் காப்புறுதியின் கீழ் காப்புறுதி செய்யக்கூடிய இடர்களைக் கொண்டுள்ள தொகுதி யாது?
(1) A, B, C (2) A, C, D (3) A, E, F (4) B, C, D (5) B, C, F (......)

**14.** பின்வருவனவற்றுள் காப்புறுதியுடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) எந்தவோர் இடரும் காப்புறுதி செய்யக்கூடியதாகும்.
(2) வாடகைக்காரருக்கு தாம் வசிக்கும் வீட்டைக் காப்புறுதி செய்வதற்கான உரிமை உண்டு.
(3) ஆதனமானது பல கம்பனிகளில் காப்புறுதி செய்யப்பட்டுள்ள போது அவ்வாதனத்திற்கு இழப்பொன்று ஏற்படும் பட்சத்தில் ஒவ்வொரு கம்பனியில் இருந்தும் தனித்தனியாக நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.
(4) தொழில் வழங்குனர் தனது ஊழியர்களைக் காப்புறுதி செய்துகொள்ள முடியும்.
(5) இழப்பீட்டுத் தத்துவமானது ஆயுளுறுதிக்குப் பொருத்தமானதாகும். (......)

**15.** பின்வருவனவற்றுள் போக்குவரத்து முறைமையுடன் தொடர்புடைய சரியான கூற்று எது?
(1) பேருந்து நிலையமானது போக்குவரத்துத் தரிப்பிடத்தின் ஒரு கூறு ஆகும்.
(2) புகையிரதப் பாதையானது போக்குவரத்து முறைமையின் ஒரு கூறு ஆகும்.
(3) ஆகாய விமானமானது போக்குவரத்துச் சக்தியின் ஒரு கூறு ஆகும்.
(4) கப்பலானது போக்குவரத்துப் பாதையின் ஒரு கூறு ஆகும்.
(5) துறைமுகமானது போக்குவரத்து முறைமையின் ஒரு கூறு ஆகும். (......)

**16.** முகாமைத்துவக் கருமங்களுடன் தொடர்புடைய சில பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - தொழிற் பிரிப்பு
B - சூழல்சார் பகுப்பாய்வு
C - கூட்டிணைப்பு
D - நோக்கங்களை ஸ்தாபித்தல்
E - பணிகளை இனங்காணுதல்
F - திணைக்களப்படுத்தல்
G - தொடர்பாடல்
மேலே தரப்பட்டுள்ளவற்றுள் ஒழுங்கமைத்தலுக்கான பணிகளை மட்டும் கொண்டுள்ள தொகுதி யாது?
(1) A, B, C, F (2) A, B, D, G (3) A, C, D, G (4) A, C, D, E (5) A, C, E, F (......)

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

**17.** பின்வரும் அட்டவணையில் **X** நிரலானது சில செயற்பாட்டு நடவடிக்கைகளையும் **Y** நிரலானது சில செயற்பாட்டு முகாமைத்துவத் தொழிற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது.

| X | Y |
|---|---|
| A. உற்பத்தி செய்தலுக்கான ஊழியத் தேவைப்பாட்டைத் தீர்மானித்தல் | 1. விநியோகச் சங்கிலி முகாமைத்துவம் |
| B. சரக்கிருப்புக் கட்டுப்பாடுகள் | 2. உற்பத்தி செய்தலுக்கான பொறியியல் |
| C. உற்பத்திக்கான அட்டவணைகளைத் தயாரித்தல் | 3. உற்பத்திக் கட்டுப்பாடுகள் |
| D. வழங்குனர்களுக்கான அபிவிருத்தி | 4. உற்பத்தித் திட்டமிடல் |

செயற்பாட்டு நடவடிக்கைகளையும் செயற்பாட்டு முகாமைத்துவத் தொழிற்பாடுகளையும் சரியாக இணைத்துக் காட்டும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 1, B - 2, C - 3, D - 4
(2) A - 2, B - 1, C - 4, D - 3
(3) A - 2, B - 3, C - 1, D - 4
(4) A - 3, B - 4, C - 2, D - 1
(5) A - 4, B - 3, C - 2, D - 1 (......)

**18.** பின்வரும் அட்டவணையில் **X** நிரலானது சந்தைப்படுத்துவோர் நோக்கில் இருந்து சந்தைப்படுத்தற் கலவையையும் **Y** நிரலானது நுகர்வோர் நோக்கில் இருந்து சந்தைப்படுத்தற் கலவையையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. உற்பத்திப்பொருள் | 1. வசதி |
| B. விலை | 2. தொடர்பாடல் |
| C. மேம்படுத்தல் | 3. நுகர்வோர் தீர்வு (தேவைகள், விருப்பங்கள்) |
| D. இடம் (விநியோகம்) | 4. கிரயம் |

சந்தைப்படுத்துவோர் நோக்கில் இருந்தும் நுகர்வோர் நோக்கில் இருந்தும் சந்தைப்படுத்தற் கலவையைச் சரியாக இணைத்துக் காட்டும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 1, B - 2, C - 3, D - 4
(2) A - 2, B - 1, C - 3, D - 4
(3) A - 2, B - 3, C - 4, D - 1
(4) A - 3, B - 4, C - 2, D - 1
(5) A - 3, B - 4, C - 1, D - 2 (......)

**19.** நிதி முகாமைத்துவத் தீர்மானங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - குறுங்கால முதலீடு
B - செலுத்தத்தக்க செலவுகள்
C - பங்கிலாபங்களின் பகிர்வு
D - கடன் மூலதனம்
E - மூலதன ஒதுக்கங்கள்
F - உரிமை மூலதனம்

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் மூலதன அமைப்பு தொடர்பான தீர்மானங்களை மட்டும் கொண்டுள்ள தொகுதி யாது?

(1) A, B, E (2) A, D, E (3) B, E, F (4) C, D, E (5) D, E, F (......)

**20.** உற்பத்தி நிறுவனம் ஒன்றில் தற்போது 80 இயந்திர இயக்குநர்கள் காணப்படுவதுடன் இங்கு உற்பத்தி செய்யப்படும் தொகைக்கும் இயந்திர இயக்குநர்களின் எண்ணிக்கைக்கும் இடையே நேரடித் தொடர்பு காணப்படுகின்றது. நிறுவனமானது எதிர்வரும் வருடங்களில் உற்பத்தியை 25% ஆல் அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது. 16 இயந்திர இயக்குநர்கள் தமது இராஜினாமாக் கடிதங்களை சமர்ப்பித்துள்ளதுடன் 04 இயந்திர இயக்குநர்கள் அடுத்த வருடத்தில் இளைப்பாறவுள்ளனர். 05 இயந்திர இயக்குநர்கள் மேற்பார்வையாளர் தரத்துக்கு பதவியுயர்த்தப்படவுள்ளனர். நிறுவன ஆட்சேர்ப்புக் கொள்கையின்படி 40% ஊழியர் தேவைப்பாடு வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்யப்படவேண்டுமெனின் உள்வாரியாக ஆட்சேர்ப்புச் செய்யப்படவேண்டிய இயந்திர இயக்குநர்கள் எத்தனை பேர்?

(1) 13 (2) 18 (3) 20 (4) 21 (5) 27 (......)

**21.** பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) தொலை இயக்கி (Remote Controller) ஒரு நிலைபொருள் (Firmware) ஆகும்.
(2) மத்திய செயன்முறைப்படுத்தல் அலகு (CPU) ஒரு உயிர்ப்பொருள் ஆகும்.
(3) காட்சித்திரை (Monitor) ஒரு மென்பொருள் ஆகும்.
(4) முறைமைச் செயற்படுத்துனர் ஒரு வன்பொருள் ஆகும்.
(5) இணையத்தளம் ஒரு தரவு ஆகும். (......)

**22.** இறக்குமதிச் செயன்முறையில் பயன்படுத்தப்படும் 'நாணயக் கடிதத்துடன்' **சம்பந்தப்படாத** தரப்பினர்

(1) இறக்குமதியாளர்
(2) ஏற்றுமதியாளர்
(3) இறக்குமதியாளர் வங்கி
(4) ஏற்றுமதியாளர் வங்கி
(5) காப்புறுதிக் கம்பனி (......)

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

**23.** அளவுசார் மற்றும் பண்புசார் முறையில் தகவல்களை வகைப்படுத்தலுக்கான நியதி
(1) மூலம் (2) முகாமைத்துவ மட்டங்கள் (3) நிகழ்தகவு
(4) தன்மை (5) நேரம் (......)

**24.** 'வேலை விவரணம்' என்பது வேலை ஒன்றுக்கான,
(1) பணிகள், கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் வேலைவாய்ப்பு நிபந்தனைகளை உள்ளடக்கிய பட்டியல் ஆகும்.
(2) தகுதிகள், பொறுப்புக்கள், பணிகள் மற்றும் தகவல்களை உள்ளடக்கிய பட்டியல் ஆகும்.
(3) தகுதிகள், பொறுப்புக்கள், கடமைகள் மற்றும் பணிகளை உள்ளடக்கிய பட்டியல் ஆகும்.
(4) பணிகள், தொழில் பெறுனர் பண்புகள், கடமைகள் மற்றும் தகுதிகளை உள்ளடக்கிய பட்டியல் ஆகும்.
(5) கடமைகள், அனுபவங்கள், வேலைவாய்ப்பு நிபந்தனைகள் மற்றும் பொறுப்புக்களை உள்ளடக்கிய பட்டியல் ஆகும். (......)

**25.** நிறுவகம் ஒன்று ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள ஊழியர்களை உள்ளடக்கிய வகையில் அமைந்த செயற்குழுவின் மூலம் தொழிற்பாட்டுத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு 2018-2020 காலப்பகுதிக்கான வணிகத்தின் கூட்டுருத் திட்டத்தைத் தயாரித்தது. இக்கூற்றில் உள்ளடங்கியுள்ள திட்டமிடல் தத்துவங்களின் எண்ணிக்கை
(1) 1 ஆகும். (2) 2 ஆகும். (3) 3 ஆகும். (4) 4 ஆகும். (5) 5 ஆகும். (......)

**26.** 'உறவுமுறைச் சந்தைப்படுத்தல் எண்ணக்கரு' என்பதனை மிகச் சிறந்த முறையில் விபரிக்கும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை உள்ளடக்கிய கூற்று
(1) வாடிக்கையாளரின் நீண்டகாலத் திருப்தியையும் நம்பிக்கையையும் உறுதி செய்தல்
(2) சமூகத்தின் நீண்டகால தேவைகளைத் திருப்தி செய்தல்
(3) சமூக வலைப்பின்னல்களைப் பயன்படுத்துவதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளல்
(4) இறுதி வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் சேவைகளை விற்பனை செய்தல்
(5) சந்தைப் போட்டிக்கு முகங்கொடுக்கத்தக்கதாக விற்பனை மேம்படுத்தலைப் பயன்படுத்தல் (......)

**27.** ஊழியர்களைத் தெரிவுசெய்யும் போது பயன்படுத்தப்படும் பரீட்சை முறையையும் அதன் நோக்கத்தையும் மிகச் சரியாகக் குறிப்பிடும் கூற்றைத் தெரிவுசெய்க.
(1) வித்தியாசமான மன ஆற்றல்களைப் பரீட்சிப்பதற்கு நுண்ணறிவுப் பரீட்சை பயன்படுத்தப்படும்.
(2) சூழ்நிலைக்கு முகங்கொடுக்கும் ஆற்றலைப் பரீட்சிப்பதற்கு பின்புலப் பரீட்சை பயன்படுத்தப்படும்.
(3) விசேட தொழில்சார் திறன்களைப் பரீட்சிப்பதற்கு மருத்துவப் பரீட்சை பயன்படுத்தப்படும்.
(4) கல்வித் தகைமையைப் பரீட்சிப்பதற்கு செய்முறைப் பரீட்சை பயன்படுத்தப்படும்.
(5) கையெழுத்துக்களைப் பரீட்சிப்பதற்கு பொது உளசார்புப் பரீட்சை பயன்படுத்தப்படும். (......)

**28.** வணிகத் திட்டம் தயாரிப்பதன் பிரதான நோக்கம்
(1) தேவையான மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளலாகும்.
(2) வணிகத்தின் சாத்தியத்தன்மையை மதிப்பிடுதலும் அதனைக் கொண்டு நடாத்துவதற்கான வழிகாட்டல்களுமாகும்.
(3) வித்தியாசமான தரப்பினருக்கு வணிகம் தொடர்பிலான விழிப்புணர்வை வழங்குதலாகும்.
(4) வணிகத்துக்குப் பொருத்தமான இடஅமைவைத் தெரிவுசெய்தலாகும்.
(5) அரசாங்க ஊக்குவிப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாகும். (......)

**29.** காசோலையின் மீது 'வரையுனரை விசாரிக்குக' எனும் குறிப்பு எச்சந்தர்ப்பத்தில் இடப்படும்?
(1) வரையுனர் கொடுப்பனவை நிறுத்தியிருக்கும் சந்தர்ப்பத்தில்
(2) வரையுனர் கொடுத்துத் தீர்க்க இயலாத சந்தர்ப்பத்தில்
(3) காசோலையில் எழுத்துப் பிழை காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில்
(4) கணக்கில் பற்றாக்குறையான பணம் காணப்படும் சந்தர்ப்பத்தில்
(5) 'சட்டப்படியான' அறிவித்தல் (நீதிமன்ற உத்தரவு) காணப்படும் சந்தர்ப்பத்தில் (......)

**30.** சந்தைப்படுத்தல் முகாமையாளர்களால் மக்கட் தொகைச் சூழலைப் பகுப்பாய்வு செய்வதில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அண்மிய காரணமாக அமையத்தக்கது
(1) நுகர்வோரின் தேவைகள் மற்றும் விருப்பங்களை அறிந்து கொள்ளல்
(2) நுகர்வோர் நடத்தை மாறுபாடுகளை இனங்காணுதல்
(3) சந்தைத் துண்டங்களின் அளவு மற்றும் வளர்ச்சியை இனங்காணுதல்
(4) வணிகச் சுழற்சியை எதிர்வுகூறல்
(5) அரசியல் மாற்றங்களை இனங்காணுதல் (......)

● **31** தொடக்கம் **40** வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளைப் **பொருத்தமான சொற்களைப்** பயன்படுத்தி நிரப்புக.

**31.** (அ) பொருட்கள் சேவைகளுக்கான கேள்வியானது ...................................... அடிப்படையில் உருவாவதுடன் அது ...................................... ஊடாக ஒரு பயனுறுதிமிக்க கேள்வியாக மாற்றமடையும்.

(ஆ) ஒரு நாட்டின் ...................................... மற்றும் ...................................... வணிகங்கள் பங்களிப்புச் செய்கின்றன.

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

**32.** (அ) சிறந்தவற்றை அமுல்படுத்தும் வகையில் வணிக நடவடிக்கைகளை நல்லவையா கெட்டவையா என மதிப்பிடுவது வணிக ................................... எனவும் மனித மற்றும் இயற்கைச் சூழல் அபிவிருத்தியை நோக்கிய வகையிலான வணிகங்கள் சார்பான கடப்பாடுகள் ................................... எனவும் அழைக்கப்படும்.

(ஆ) புகையிலை மற்றும் மதுபான வகைகளுக்கான வரிகள் ................................... திணைக்களத்தின் மூலம் சேகரிக்கப்படும் அதேவேளை உழைக்கும் போது செலுத்த வேண்டிய வரிகள் (PAYE) ................................... திணைக்களத்தின் மூலம் சேகரிக்கப்படுகின்றன.


**33.** (அ) சர்வதேச வியாபார உடன்படிக்கை ஒன்றின் பிரதான நோக்கங்களாவன, பொருட்கள் சேவைகளுக்கான ................................... உருவாக்குவதும் சர்வதேச ................................... அபிவிருத்தி செய்வதும் ஆகும்.

(ஆ) கொடுப்பனவுகள் துரிதப்படுத்தப்படுவதனை ................................... கழிவுகள் ஊக்குவிக்கும் அதேவேளை கூடுதலான அளவு பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதனை ................................... கழிவுகள் ஊக்குவிக்கின்றன.

**34.** (அ) கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்திலுள்ள எந்தவொரு பட்டியல்படுத்திய கம்பனியின் பங்குகளும் நிதிச் சாத்தியம், ................................ மற்றும் ............................ ஆகிய நியதிகளைப் பூர்த்தி செய்பவையாக இருந்தால் மட்டுமே S&P SL20 சுட்டியில் உள்ளடக்கப்படுவதற்கான தகுதியைப் பெற்றுக்கொள்ளும்.

(ஆ) நிதியைத் திரட்டுவதில் உடைமையை மாற்றாமல் குத்தகைக்கு எடுத்தவர் ஆதனத்தைப் பயன்படுத்துவதற்கு ................................... குத்தகை அனுமதிப்பதுடன் இடர்கள் மற்றும் திரும்பல்களை மாற்றக்கூடியதாக குத்தகைக்கு எடுத்தவர் ஆதனத்தைப் பயன்படுத்துவதற்கு ................................... குத்தகை அனுமதிக்கின்றது.

**35.** தொடர்பாடல் செயன்முறைக்கு உரித்தான பின்வரும் உருவிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.




**36.** (அ) அதிகாரம் வழங்கப்பட்ட வழியின் அடிப்படையில் ஒழுங்கமைப்பானது ......................... மற்றும் ............................ என வகைப்படுத்தப்பட முடியும்.

(ஆ) கூட்டுருத் திட்டங்களைத் தயாரிப்பதில் முகாமையாளர்கள் அடிப்படையில் ............................. திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் அவர்கள் ............................................ திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**37.** பின்வரும் சமன்பாடுகள் தொடர்பில் **சரி பிழை** கூறுக.

| | சமன்பாடு | சரி / பிழை |
|---|---|---|
| 1. | சமப்பாட்டுப் புள்ளி = நிலையான கிரயம் ÷ பங்களிப்பு | ......................... |
| 2. | பங்களிப்பு = அலகுக்கான விற்பனை விலை ÷ அலகுக்கான மாறும் கிரயம் | ......................... |
| 3. | விரைவு விகிதம் = மொத்தச் சொத்துக்கள் ÷ நடைமுறைப் பொறுப்புக்கள் | ......................... |
| 4. | வட்டிக் காப்பு விகிதம் = வட்டிக்கும் வரிக்கும் முந்திய இலாபங்கள் ÷ வட்டி | ......................... |

**38.** (அ) உற்பத்தியின் மீது அக்கறை செலுத்துவது ................................. சார்ந்த தலைமைத்துவம் என்பதுடன் ............................ மீது அக்கறை செலுத்துவது ஊழியர் சார்ந்த தலைமைத்துவம் எனப்படும்.

(ஆ) வழமையான வேலை நேரங்களுக்குக் கூடுதலான மேலதிக வேலை மணித்தியாலங்களுக்கான கொடுப்பனவு ................................................. எனவும் உற்பத்தி இலக்குகளுக்கு மேலதிக உற்பத்திகளுக்கான கொடுப்பனவு ................................. எனவும் அழைக்கப்படும்.

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

**39.** (அ) பசுமை உற்பத்தியில் பயன்படுத்தக்கூடிய மூன்று கழிவு முகாமைத்துவ நடைமுறைகளாவன, குறைத்தல் (Reduce) ...................................... மற்றும் ...................................... என்பன ஆகும்.

(ஆ) பெறுமதி மற்றும் அளவின் அடிப்படையில் வகைப்படுத்துவதன் மூலம் சரக்கிருப்புக்களைக் கட்டுப்படுத்துதல் ...................................... முறை எனவும் சரக்கிருப்புக்களைப் பூச்சிய மட்டத்தில் பேணுவதன் மூலம் கட்டுப்படுத்துதல் ...................................... முறை எனவும் அழைக்கப்படும்.

**40.** (அ) நுகர்வோர் பெறுமதி என்பதன் கருத்து குறித்த உற்பத்திப்பொருள் ஒன்று தொடர்பில் நுகர்வோருடைய உணரப்பட்ட (இனங்காணப்பட்ட) ...................................... உடன் ...................................... இணைதல் ஆகும்.

(ஆ) குறைவான ...................................... காரணமாகவும் விரிவான ...................................... கவர்தல் காரணமாகவும் இணையம் மூலமான விற்பனை மேம்படுத்தல் பிரபல்யமடைந்து வருகின்றது.

- **41** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்கு **மிகப் பொருத்தமான விடைகளை** எழுதுக.

**41.** பின்வரும் நியமங்களுக்குப் பொருத்தமான சான்றுப்படுத்தல் முறைமைகளை (துறைகளை) எழுதுக.

1. ISO 9001 : 2015 ......................................
2. ISO 14001 : 2015 ......................................
3. ISO 22000 : 2005 ......................................
4. ISO 26000 ......................................

**42.** இலங்கையில் சிற்றளவு வணிகங்களுக்காக அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற நிதி **சாரா** ஊக்குவிப்புக்களின் **நான்கு** வகைகளைக் குறிப்பிடுக.

1. ......................................
2. ......................................
3. ......................................
4. ......................................

**43.** இலத்திரனியல் வியாபாரம் நிகழும் **நான்கு** வழிகளைக் குறிப்பிடுக.

1. ......................................
2. ......................................
3. ......................................
4. ......................................

**44.** சந்தைத் துண்டமாக்கலின் பயனுறுதித் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான **நான்கு** தேவைப்பாடுகளை எழுதுக.

1. ......................................
2. ......................................
3. ......................................
4. ......................................

**45.** வணிகமொன்றுக்குக் கிடைக்கக்கூடிய **நான்கு** நேர் நிதி மூலங்களைக் குறிப்பிடுக.

1. ......................................
2. ......................................
3. ......................................
4. ......................................

[பக். 8 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka


**46.** கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தில் கொடுக்கல்வாங்கல் செய்யப்படும் **நான்கு** வகையான பிணைகளைப் பெயரிடுக.


1. ..........................................................................................................
2. ..........................................................................................................
3. ..........................................................................................................
4. ..........................................................................................................


**47.** நிறுவனமொன்றின் மனிதவள முகாமைத்துவத்தின் வெற்றிகரமான தன்மையை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** நியதிகளைக் குறிப்பிடுக.


1. ..........................................................................................................
2. ..........................................................................................................
3. ..........................................................................................................
4. ..........................................................................................................

**48.** பின்வரும் வரிப்படங்களினால் எடுத்துக்காட்டப்படும் கணினி வலைப்பின்னல்களைப் பெயரிடுக.

1.  ........................................................................

2.  ........................................................................

3.  ........................................................................

4.  ........................................................................

**49.** தரவு செயன்முறைப்படுத்தல் தொழினுட்பத்தை வகைப்படுத்தக்கூடிய **நான்கு** முறைகளைக் குறிப்பிடுக.

1. ....................................................... 2. .......................................................................
3. ....................................................... 4. .......................................................................

**50.** வணிகமொன்றுக்கான சாத்தியத்தன்மை பற்றிய கற்கையை மேற்கொள்கையில் கவனத்திற் கொள்ளவேண்டிய **நான்கு** துறைகளைக் குறிப்பிடுக.

1. ..........................................................................................................
2. ..........................................................................................................
3. ..........................................................................................................
4. ..........................................................................................................

* * *

Department of Examinations, Sri Lanka

13840

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

| | | |
|---|---|---|
| ව්‍යාපාර අධ්‍යයනය II<br>வணிகக் கல்வி II<br>Business Studies II | 32 T II | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

**அறிவுறுத்தல்கள்:**

※ ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

**1.** (i) (அ) வணிகம் ஒன்றின் நோக்கங்கள் **நான்கைப்** பட்டியலிடுக.

(ஆ) "உற்பத்திப்பொருட்களானவை பொருட்கள் சேவைகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டவையல்ல." உற்பத்திப்பொருட்களாகக் கருத்திற்கொள்ளத்தக்க பொருட்கள் சேவைகள் **அல்லாதன நான்கைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) (அ) நுகர்வுப்பொருட்களுக்கான வகைப்படுத்தல் முறைகளுக்குள்ளே 'தளபாடங்கள்' மற்றும் 'அகராதிகளுக்குப்' (Glossary) பொருத்தமான வகைப்படுத்தல் முறைகளைத் தருக.

(ஆ) மேலே (ii)(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பொருட்களும் நீர் குறிப்பிட்ட வகைப்படுத்தல் முறைகளுக்கு ஏன் உரித்தாகும் என்பதனைக் காரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) கடந்த சில வருடங்களாக இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுற்றுலாக் கைத்தொழிற்றுறை மூலமான பங்களிப்பின் படிப்படியான வளர்ச்சிக்குக் காரணமான **இரண்டு** விடயங்களைக் குறிப்பிடுக.

(ஆ) அரச மற்றும் தனியார் துறைகள் குறிப்பிட்ட சில வணிக நடவடிக்கைகளில் போட்டிமிக்கவையாக ஈடுபடுகின்றபோதும், தனியார் துறையிலும் பார்க்க அரசதுறையின் மூலம் தமது தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பொது மக்களை ஊக்குவிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** விடயங்களைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) இலங்கையின் முதியோர் சனத்தொகை அதிகரிப்பதன் மூலம் வாய்ப்பைப் பெறும் கைத்தொழிலொன்றையும் அச்சுறுத்தலை எதிர்நோக்கக்கூடிய கைத்தொழிலொன்றையும் பெயரிட்டு, அதற்கான காரணங்களைத் தருக. (04 புள்ளிகள்)

(v) ஒரு குறித்த கைத்தொழிலின் அதிகரித்த போட்டித்தன்மையானது அதே கைத்தொழிலில் ஈடுபடும் வணிக நிறுவனம் ஒன்றினது உற்பத்திப்பொருள் மற்றும் விலைத் தீர்மானங்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** முறைகள் வீதம் விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**2.** (i) (அ) வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதற்கு அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய **நான்கு** தந்திரோபாயங்களைத் தருக.

(ஆ) "நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் அரசாங்கத்தின் நோக்கமாகும்." குடிநீரைப் போத்தலில் அடைக்கும் உற்பத்தியில் ஈடுபடும் ஒருவராக உம்மைக் கருதிக்கொண்டு வணிகர் என்ற வகையில் மேற்கூறிய நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு உம்மால் பங்களிப்புச் செய்யக்கூடிய **இரண்டு** வழிகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) வருமானவரி மற்றும் பெறுமதிசேர் வரி (VAT) ஆகியவற்றை ஒப்பிடுவதன் மூலம் அவற்றுக்கிடையிலான **இரண்டு** வேறுபாடுகளை எழுதுக.

(ஆ) வங்கிக்கடன் வட்டிவீத அதிகரிப்பானது மெய் ஆதனச் சொத்து (Real estate) வணிகத்தில் ஈடுபட்டுள்ள வணிகர் ஒருவர் மீது தாக்கம் செலுத்தக்கூடிய **இரண்டு** வழிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) "பொதுத்துறை வணிகங்களில், பொதுக் கூட்டுத்தாபனங்களிலும் பார்க்க அரசாங்கத்திற்குச் சொந்தமான பொதுக் கம்பனிகள் வணிகப் போட்டிக்கு முகங்கொடுப்பதற்கு மிகவும் பொருத்தமானவையாகும்." இக்கூற்றை நியாயப்படுத்துவதற்கு **இரண்டு** விடயங்களைச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) இலங்கையின் 'கூட்டுறவு இயக்க முறைமையில்', அது செயற்படும் தன்மையின் அடிப்படையில் இனங்காணக்கூடிய **இரண்டு** பிரச்சினைகளைத் தருக.

(ஆ) அங்கீகாரம் பெறுபவரைத் தெரிவுசெய்யும் போது அங்கீகாரம் வழங்குபவரால் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய **நான்கு** விடயங்களை எழுதுக. (04 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

(v) சனந்தன் மற்றும் பியந்தன் ஆகியோர் தலா ரூ. 100 000 ஐ முதலீடு செய்வதன் மூலம் எழுத்து வடிவிலான உடன்படிக்கை எதுவுமின்றி மருந்துப் பொருட்களை விற்பனை செய்வதற்கான பங்குடைமை வியாபாரமொன்றை 'XY அன்ட் கம்பனி' எனும் பெயரில் ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றனர். தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் ஆரம்பிக்கப்படவுள்ள இப்பங்குடைமையுடன் தொடர்புடைய அடிப்படைச் சட்ட விதிகள் **நான்கைக்** குறிப்பிட்டு, அவை எவ்வாறு பொருத்தமானவை என்பதனைச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**3.** (i) ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு வணிகர்களிலும் பார்க்க முயற்சியாளர்களே ஜீவாதாரமானவர்கள் ஆவர். முயற்சியாளரையும் வணிகரையும் ஒப்பிடுவதன் மூலம் இக்கூற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) அமலா என்பவர் சிறு பராயத்தில் இருந்தே ஒரு முயற்சியாளராக வரும் எண்ணத்தைக் கொண்டிருந்தார். எனினும் அவர் நிதி ரீதியான வசதியைக் கொண்டிருக்காமையினால் ஓரளவு பெறுமதிவாய்ந்த கற்களைப் பயன்படுத்தி அலங்கார உருப்படிகளை உற்பத்தி செய்வதற்காக வரையறுத்த மூலதனத்துடன் வணிகமொன்றை ஆரம்பித்தார். அது தற்போது சிறப்பாக முன்னேறிச் செல்கின்றது. இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முயற்சியாண்மைசார் பண்புகள் **இரண்டைக்** காரணங்களுடன் விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) காசோலையைக் குறுக்குக் கோடிடுவதன் மூலம் வரையுனர் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் **இரண்டு** நோக்கங்களைக் குறிப்பிடுக.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கும் இடையே காணப்படும் **இரண்டு** வேறுபாடுகளை எழுதுக. (04 புள்ளிகள்)

(iv) இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கையின் படி (2016), நாட்டின் மொத்த சனத்தொகையில் சுமார் 6% சதவீதத்தினர் கடன் அட்டைகளைப் பயன்படுத்துகின்றனர்.

(அ) இலங்கையில் கடனட்டைகளின் பாவனை குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கான **இரண்டு** காரணங்களைத் தருக.

(ஆ) கடனட்டைப் பாவனையை அதிகரிக்கச் செய்வதற்கு வங்கியாளர்கள் பின்பற்றக்கூடிய **நான்கு** தந்திரோபாயங்களைத் தருக. (04 புள்ளிகள்)

(v) (அ) ஒரு நாட்டின் நாணயமாற்றுக் கொள்கைத் தளர்வானது வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அந்நாட்டு வணிகங்களில் தாக்கம் செலுத்தக்கூடிய **இரண்டு** வழிகளை எழுதுக.

(ஆ) வணிக வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள் மீதான இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையானது வாடிக்கையாளர் மீது அனுகூலமான தாக்கத்தைச் செலுத்தும் **இரண்டு** வழிகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**4.** (i) (அ) பியசீலி என்பவர் தனது சுவீகாரக் குழந்தையான வசந்தனுக்கு ஆயுளுறுதிப் பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொண்டார். குழந்தைப் பருவத்திலிருந்தே காணப்பட்ட ஒரு நோயின் காரணமாக வசந்தன் 26 வயதில் இறந்தான். காப்புறுதித் தத்துவங்களின் அடிப்படையில், வசந்தனின் ஆயுளுறுதிப் பத்திரம் தொடர்பில் நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதில் பியசீலி எதிர்நோக்கக்கூடிய **இரண்டு** பிரச்சினைகளைச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) 'பொது மக்கள் பொறுப்புக் காப்புறுதி' என்றால் என்ன என்பதனை விபரித்து, அதற்கு உதாரணமொன்று தருக. (04 புள்ளிகள்)

(ii) (அ) தொடர்பாடல் ஊடகம் ஒன்றைத் தெரிவுசெய்யும்போது நிறுவனமொன்றினால் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.

(ஆ) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையைப் (Global Positioning System - GPS) பயன்படுத்துவதன் மூலம் பொருட்களுக்கான போக்குவரத்தின் போது வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டு** தருக. (04 புள்ளிகள்)

(iii) சில்லறை வணிகத் துறையில் சிறப்புச் சந்தைகள் மிகவும் பிரசித்திபெற்று விளங்குகின்ற போதிலும் இன்னும் மரபு ரீதியான சில்லறைக் கடைகளும் பரவலாகக் காணப்படுகின்றமையில் செல்வாக்குச் செலுத்தும் காரணங்கள் **நான்கைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) "பொருட்களை விநியோகிக்கும் செயன்முறையில் மொத்த வியாபாரிகள் முக்கியமானதொரு தரப்பினராவர்." இக்கருத்துக்குச் சார்பாகவும் எதிராகவும் ஒவ்வொன்றுக்கும் **இரண்டு** காரணங்கள் வீதம் குறிப்பிடுக.

(ஆ) 'முன்னுரிமைக்கான பொதுமைப்படுத்தப்பட்ட முறைமை +' (Generalized System of Preference - GSP+) என்பதனால் கருதப்படுவது யாது? (04 புள்ளிகள்)

(v) (அ) இலத்திரனியல் வியாபாரம் நிகழ்வதில் காணப்படும் படிமுறைகளைப் பட்டியலிடுக.

(ஆ) இலத்திரனியல் வணிகத்துக்கும் (e - business) இலத்திரனியல் வர்த்தகத்துக்கும் (e - commerce) இடையிலான **இரண்டு** வேறுபாடுகளை எழுதுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

## பகுதி II

**5.** (i) (அ) "சரியான கருமங்களைச் சரியான வழியில் செய்தல்" முகாமைத்துவமாகும் என பீற்றர் டிறக்கர் குறிப்பிட்டுள்ளார். இவ்வெண்ணத்தில் உள்ளடங்கியிருக்கும் அடிப்படை முகாமைத்துவக் கூறுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ஆ) ஹென்றி மின்றஸ்பேக் என்பவரால் விபரிக்கப்பட்ட முகாமையாளர் ஒருவருக்கான தீர்மானம் எடுத்தல் வகிபாகத்தில் காணப்படும் உப வகிபாகங்கள் **நான்கைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) (அ) கட்டுப்பாட்டு விசாலத்தைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** விடயங்களைக் குறிப்பிடுக.

(ஆ) நிறுவனமொன்றின் கூம்பு வடிவிலான (Pyramid shape) நிறுவனக் கட்டமைப்பொன்று பிரதிபலிக்கும் **இரண்டு** அடிப்படை விடயங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) வணிக நிறுவனமொன்றின் நோக்கங்களின் (Objectives) அடிப்படைக் குணாம்சங்கள் **நான்கைச்** சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) பகுத்தறிவான தீர்மானம் எடுத்தல் செயன்முறையின் படிமுறைகள் யாவை?

(ஆ) இலட்சிய நோக்குக் கூற்றொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய **இரண்டு** அடிப்படைக் கூறுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) (அ) திட்டமிடற் செயன்முறையில் காணத்தக்க **நான்கு** நடைமுறைப் பிரச்சினைகளை எழுதுக.

(ஆ) "நிறுவனமொன்றின் உயர்மட்ட முகாமையாளர்கள் ஏனைய முகாமைத்துவ மட்டங்களை விட கூடுதலான எண்ணக்கருவாக்கத் திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்." இக்கருத்திற்குச் சார்பான **இரண்டு** விடயங்களைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**6.** (i) ஒழுங்கமைத்தலின் போது இடம்பெறத்தக்க பலவீனங்கள் **நான்கைச்** சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) சட்டப்படியான வலுவை விட முகாமையாளர் ஒருவர் வலுவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வேறு மூலங்கள் **நான்கைப்** பெயரிட்டு, அவற்றுள் ஏதாவது **இரண்டை** விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) ஜனநாயக தலைமைத்துவப் பாங்கு, தலையிடாத் தலைமைத்துவப் பாங்கு ஆகியவற்றுக்கிடையிலான **இரண்டு** ஒற்றுமைகளை எழுதுக.

(ஆ) கீழ்மட்ட (Floor - Level) ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்காக வணிகமொன்று பயன்படுத்தக்கூடிய **நான்கு** முறைகளைத் தருக. (04 புள்ளிகள்)

(iv) (அ) நிறுவனமொன்றின் முறைசாராத் தொடர்பாடலின் **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரிதிகூலங்களையும் குறிப்பிடுக.

(ஆ) நிறுவன அதிகார வரிசையின் பிரகாரம் மேல்மட்ட முகாமையிலிருந்து கீழ்மட்ட முகாமைக்குத் தொடர்பாடப்படும் **இரண்டு** வகையான தகவல்களையும் கீழ்மட்ட முகாமையிலிருந்து மேல்மட்ட முகாமைக்குத் தொடர்பாடப்படும் **இரண்டு** வகையான தகவல்களையும் எழுதுக. (04 புள்ளிகள்)

(v) கட்டட ஒப்பந்தக்காரரான கருணா என்பவர் தனது முன்னைய செயற்றிட்டங்களின் போது கட்டட மூலப்பொருட்கள் வீணானமையையும் குறித்த நேரத்தில் செயற்றிட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாது போனமையையும் கண்டறிந்தார். எதிர்கால செயற்றிட்டங்களின் போது மூலப்பொருட்கள் வீணாகுவதைக் குறைப்பதற்கும் உரிய காலப்பகுதியினுள் செயற்றிட்டங்களை நிறைவு செய்வதற்குமென கருணா பின்பற்றத்தக்க கட்டுப்பாட்டு முறைகள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**7.** (i) செல்லிடத் தொலைபேசியை ஒரு உதாரணமாகக் கொண்டு உற்பத்திப்பொருளொன்றின் வித்தியாசமான ஐந்து மட்டங்களில் ஏதேனும் **நான்கு** மட்டங்களை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) பொதியொன்றை வடிவமைக்கும் போது அதன் பொருத்தமான தன்மையைப் பரிசோதிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** சோதனைகளைக் (பரப்புக்களைக்) குறிப்பிடுக.

(ஆ) பயனுறுதியான பரிமாற்றத்துக்காகத் திருப்திப்படுத்த வேண்டிய **நான்கு** நிபந்தனைகளைப் பட்டியலிடுக. (04 புள்ளிகள்)

(iii) (அ) 'பேனா' மற்றும் 'மூக்குக் கண்ணாடி' ஆகிய பொருட்களை உற்பத்தி செய்வற்கு மிகப் பொருத்தமான உற்பத்தி முறைகளைக் (Production methods) குறிப்பிட்டு, அதற்கான காரணங்களைத் தருக.

(ஆ) உற்பத்தி நிறுவனமொன்றில் உற்பத்தித் தள அமைப்பை வடிவமைக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** விடயங்களை எழுதுக. (04 புள்ளிகள்)

(iv) கடந்த சில ஆண்டுகளாக நிறுவனமொன்றின் செயற்பாட்டு வருமானத்தில் படிப்படியானதொரு வீழ்ச்சி காணப்பட்டது. இந்த நிறுவனம் செயற்பாட்டு வருமானத்தினை அதிகரிக்கச் செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** தந்திரோபாயங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) பொது வரையறுத்த கம்பனி ஒன்றிற்குக் கிடைக்கக்கூடிய வெளிவாரி நிதி மூலங்கள் **இரண்டைப்** பெயரிட்டு, அந்நிதிமூலங்களின் **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

**8.** (i) எழுதுவினைஞர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இணையத்தினூடாக விண்ணப்பங்களைக் கோருவதன் மூலம் ஒரு நிறுவனத்துக்குக் கிடைக்கும் **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் தருக.

(04 புள்ளிகள்)

(ii) நிர்மலா என்பவர் ஐந்து மாதங்களுக்கு முன்னர் ABC நிறுவனத்தில் ஆறு மாதங்களைக் கொண்ட தகுதிகாண் கால அடிப்படையில் ஒரு முகாமைத்துவ உதவியாளராக இணைந்து கொண்டார். ஆரம்பத்தில் இருந்தே நிறுவன முகாமையானது அவரது வேலையின் தரத்தில் திருப்தி கொள்ளவில்லை. நிர்மலா தொடர்பில் முகாமையானது எடுக்கக்கூடிய **நான்கு** தீர்மானங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) (அ) தகவல் முறைமையைப் பாதுகாப்பதற்குக் கம்பனி ஒன்று பயன்படுத்தக்கூடிய பாதுகாப்பு முறைகள் **நான்கு** தருக.

(ஆ) தரவு, தகவல் ஆகியவற்றை ஒப்பிட்டு, அவற்றுக்கிடையிலான **இரண்டு** வேறுபாடுகளை எழுதுக.

(04 புள்ளிகள்)

(iv) நிறுவனமொன்றின் செயற்பாட்டு மட்டத்தில் கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமையைப் (TPS) பயன்படுத்தக்கூடிய முகாமைத்துவத் தொழிற்பாடுகள் **இரண்டைப்** பெயரிட்டு, ஒவ்வொரு தொழிற்பாட்டுக்கும் **இரண்டு** கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமைகள் வீதம் தருக. (04 புள்ளிகள்)

(v) (அ) வணிகத் திட்டம் ஏன் முக்கியமானது என்பதற்கு **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக.

(ஆ) வணிகத் திட்டமொன்றின் ஒரு பகுதியாக செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான **நான்கு** தேவைப்பாடுகளைத் தருக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

* * *

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka